## பத்தாம் வகுப்பு – காலாண்டுத் தேர்வு – செப்டம்பர் 2015

## சமூக அறிவியல் - விடைக்குறிப்புகள்

**சரியான விடை**

1. அ. டாக்டர் சன்யாட்சென்
2. ஈ. ஹெலிகோலாந்து
3. ஆ. பெயிண்டர்
4. இ. 1945
5. அ. மின்னல் போர்
6. ஆ. அலகாபாத்
7. இ. நார்வெஸ்டர்ஸ்
8. ஆ. யுரேனியம்
9. அ. அரிசி மற்றும் கோதுமை
10. ஆ. கனிம
11. அ. 1963
12. ஈ. டெல்லி
13. இ. மக்களின் வாழ்க்கை தரத்தை
14. அ. 15.8 சதவீதம்

**பொருத்துக**

15. (i)

அ. பிரிட்டன்

ஆ. கடனுதவிகள்

இ. முசோலினியின் தொண்டர்கள்

ஈ. ஜெர்மனி

உ. 2002

15. (ii)

அ. கேதர்நாத்

ஆ. ஜுன் முதல் செப்டம்பர்

இ. பருத்திப் பயிர்

ஈ. மேற்கு வங்காளம்

உ. உத்திர பிரதேசம்

**2 மதிப்பெண் வினாக்கள்**

16. **ஏகாதிபத்தியம்**
    1. ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுகட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.
    2. ஒரு நாடு தன் நாட்டின் ஆட்சியை மற்றொரு நாட்டின் மீது திணித்தல்.
    3. ஒரு நாடு மற்றொரு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களை கையக்கடுத்தி அந்நாட்டின் இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்ளுதல்.

17. **முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணம்**
    1. 1914-ம் ஆண்டு ஜுன் மாதம் 28-ம் நாள் நடந்த நிகழ்ச்சி.
    2. ஆஸ்திரிய நாட்டு இளவரசரையும் அவரது மனைவியையும் செர்பிய நாட்டு தீவிரவாத இளைஞனால் செராஜிவோ-வில் கொல்லப்பட்டது
    3. செர்பியாவின் பதில் திருப்தி அளிக்காததால், ஆஸ்திரியா 1914 ஆம் ஆண்டு ஜுலை 28ம் தேதி செர்பியா போரை அறிவித்ததால் முதல் உலகப் போர் துவங்கியது.

18. **பொருளாதாரம் பெருமந்தம்**
    1. அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவு.
    2. பங்குகள் விலை உயரும் என்ற அனுமானத்தில் மக்கள் கடன் வாங்கி பங்குச் சந்தையில் முதலீடு செய்தது.

19. **பாசிசம் - பொருள்**
    1. பாசிசம் என்றும் சொல் பாசிஸ் என்னும் இலத்தீன் வார்த்தையில் இருந்து தோன்றியது.
    2. இதற்கு “கூட்டு” (அ) “குழு” என்று பொருள்

20. **ஹிட்லர் - அதிபர்**

1. ஹிட்லர் தலைமையில் நாசிசக் கட்சி ஒரு பெரிய கட்சியாக வளர்ந்து, 1932ஆம் ஆண்டு தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்று இரண்டாவது பெரிய கட்சியாக விளங்கியது.
2. 1933ல் ஹிட்லர் ஜெர்மனியின் சான்கலரானார்.
3. 1934ல் ஹிண்டன்பர்க் காலமானதைத் தொடர்ந்து ஹிட்லர் குடியரசு தலைவரானார்.
4. பின்னர் குடியரசைக் கலைத்து ஹிட்லர் தன்னை ஜெர்மனியின் அதிபராக தானே அறிவித்தக் கொண்டார்.

21. **அழித்துப் பின்வாங்கும் கொள்கை**

1. இரண்டாம் உலகப் போரில் இரஷ்யாவிற்கும் ஜெர்மானிக்கும் இடையே நடைபெற்ற போரில் இரஷ்யர்கள் பின்பற்றியக் கொள்கை அழித்து பின்வாங்கும் கொள்கை ஆகும்.
2. இக்கொள்கை மூலம் பயிர்கள், பாலங்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருக்க தாங்களே தீயிட்டு அழித்துக் கொண்டு முன்னேறினர்.
3. இரஷ்ய தலைநகர் மாஸ்கோவை கைப்பற்றிய ஜெர்மானிய படைகளுக்கு எதுவும் கிடைக்காததால் ஜெர்மனிக்கு தோல்வி முகம் ஏற்பட்டது.

22. **ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள**

1. உலக அரங்கில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுதல்
2. அனைத்து நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்
3. நாடுகளுக்கிடையேயான சிக்கலை அமைதியாக முறையில் தீர்த்தல்

23. **ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்கள்**

1. ஐரோப்பிய நாடாளுமன்றம்
2. ஐரோப்பிய ஒன்றியமன்றம்
3. ஐரோப்பிய ஆணையம்
4. ஐரோப்பிய நீதிமன்றம்
5. ஐரோப்பிய கணக்கீட்டாளர் மன்றம்.

24. **பஞ்ச சீலத்தின் ஐந்து கொள்கைகள்**

1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதித்தல்
2. எந்த ஒரு நாடும் பிறநாட்டை தாக்கக் கூடாது.
3. எந்த ஒரு நாடும் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது.
4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

25. **தேசியக் கட்சிகள்**

1. இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்ற தேர்தலில் நான்கிற்கு மேற்பட்ட மாநிலங்களில் ஆறு சதவீத வாக்குகளை பெறும் கட்சிகள் தேசிய கட்சிகள் ஆகும்.
2. எ.கா. காங்கிரஸ், பா.ஜ.க.

26. **இமயமலையின் முக்கியத்துவம்**

1. இந்தியாவின் இயற்கை அரணாக அமைந்துள்ளது.
2. இமயமலை அந்நிய படையெடுப்பை தடுக்கிறது
3. வட இந்திய நதிகள் உற்பத்தியாகிறது.
4. தென் மேற்கு பருவ காற்றினை தடுத்து அதிக மழைப் பொழிவை தருகிறது

27. **இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள்**

1. அட்சங்கள் 2. உயரம் 3. கடலிலிருந்து தூரம்
4. காற்று. 5. மலைகளின் அமைவு.

28. **பருவக்காற்று**

1. மான்சூன் என்ற சொல் மௌசிம் என்ற அரேபியச் சொல்லாகும்.
2. கோடைக்காலத்திற்கும் குளிர்காலத்திற்கும் இடையே தங்களது திசையை முழுவதும் மாற்றிக் கொண்டு வீசும் காற்றுகளுக்கு பருவகாற்று என்று பெயர்

29. **செழுமையான மண்ணில் காணப்படும் பொருட்கள்**

**1. மிக நுண்ணிய சத்துக்கள்**

கந்தகம், குளோரின், செம்பு, மாங்கனீசு, இரும்பு, கோபால்ட், துத்தநாகம்

**2. பெரிய சத்துப் பொருட்கள்**

நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்பேட்டுகள்

30. **தோட்டப் பயிர்கள்**

1. தேயிலை 2. காப்பி 3. இரப்பர் 4. பழங்கள் 5. காய்கறிகள்.

31. **வேளாண் தொழிலின் வகைகள்**

1. பழமையான வேளாண்மை. 2. தன்னிறைவு வோளண்மை.
3. வணிக வேளாண்மை. 4. தோட்ட வோண்மை.

32. **வேளாண் சார்ந்த தொழிலகங்கள்**

1. வேளாண் பொருட்களைச் சார்ந்த தொழிலகங்கள்
2. எ.கா. அ. பருத்தி - பருத்தி ஆலைகள்.
   ஆ. சணல் - சணல் ஆலைகள்.
   இ. கரும்பு - சர்க்கரை ஆலைகள்.

33. **தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள்**

1. மூலப்பொருட்கள் 2. எரிசக்தி 3. போக்குவரத்து 4. மனித சக்தி
5. நீர்வளம் 6. சந்தை 7. அரசாங்க கொள்கைகள்

34. **தலா வருமானம்**

1. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளக்க பயன்படும் கருவி தலா வருமானம்.
2. நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு தலா வருமானம் ஆகும்.
3. தலா வருமானம் = $\frac{\text{மொத்த நாட்டு வருமானம்}}{\text{மொத்த மக்கள் தொகை}}$

35. **தலையிடாக் கொள்கை**

1. அரசு, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.
2. பொருள்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு போன்றவற்றில் அரசின் தலையீடு இல்லாமல் இருப்பது.

## வேறுபாடுகள் (ஏதேனும் 2 மட்டும்)

36.

| மேற்கு கடற்கரை சமவெளி | கிழக்கு கடற்கரை சமவெளி |
|---|---|
| குஜராத் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது | மேற்கு வங்காளத்திலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது |
| வடக்கே கொங்கன் கடற்கரை அமைந்துள்ளது | வடக்கே வடசர்கார் சமவெளி அமைந்துள்ளது |
| தெற்கே மலபார் கடற்கரை அமைந்துள்ளது | தெற்கே சோழ மண்டல கடற்கரை அமைந்துள்ளது |
| மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் காணப்படுகிறது | கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் காணப்படுகிறது |
| இங்கு ஏரிகள், கழிகள் மற்றும் காயல்கள் காணப்படுகின்றன | இச்சமவெளியில் 'சிலிகா ஏரி' 'கொல்வேரு ஏரி' அமைந்துள்ளது. |

37.

| தென்மேற்கு பருவக் காற்று | வடகிழக்கு பருவக் காற்று |
|---|---|
| ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசும் | அக்டோபர் முதல் நவம்பர் வரை வீசும் |
| அரபிக் கடலிலிருந்து வீசும் | வங்காள விரிகுடாவிலிருந்து வீசும் |
| கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது | நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுகிறது |
| மேற்கு கடற்கரையில் மழை பொழிவை தருகிறது | கிழக்கு கடற்கரையில் மழை பொழிவை தருகிறது |
| மும்பை போன்ற பகுதியில் அதிக மழை பொழிகிறது | சோழ மண்டல கடற்கரைக்கு அதிக மழை பொழிகிறது |
| அதிக மழையை தரும் | குறைவான மழையைத் தரும் |
| இது ஈரப்பதமான காற்று | இது வறண்ட காற்று |

38.

| வானிலை | காலநிலை |
|---|---|
| ஓர் இடத்தில் உள்ள வெப்பம் அழுத்தம், காற்று, ஈரப்பதம், மற்றும் மழைப் பொழிவு குறிப்பது | ஓரிடத்தின் நீண்ட நாளைய உண்மையான சராசரி வானிலையைக் குறிப்பது. |
| அன்றாட நிலையைக் குறிப்பது ஆகும். | இதனை அளவிட 35 வருட கால வானிலை தேவைப்படுகிறது. |
| தினமும் மாறுபடும் | நீண்ட நாளைக்கு ஒரே மாதிரியாக இருக்கும் |
| மாறுதலுக்கு உட்பட்டது | மாறாதது |

39.

| புதுப்பிக்க கூடிய வளங்கள் | புதுப்பிக்க முடியாத வளங்கள் |
|---|---|
| மீண்டும் மீண்டும் புதுப்பிக்க கூடியது | பயன்பாட்டிற்கு பின் மீண்டும் புதுப்பிக்க இயலாது |
| உ-ம் சூரிய ஒளி, காற்று, நீர் | உ-ம் நிலக்கரி, கச்சா எண்ணெய் |
| இவை தொடர்ந்து இயற்கையாக கிடைக்கக் கூடியது | இவை தொடர்ந்து கிடைக்காது. |
| மாசுக்களை ஏற்படுத்தாது | மாசுக்களை ஏற்படுத்தும் |

40.

| தன்னிறைவு வேளாண்மை | வணிக வேளாண்மை |
|---|---|
| குடும்ப தேவைக்காக உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்வதாகும் | வணிக தேவைக்காக உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்வதாகும் |
| குறைந்த அளவு உற்பத்தி செய்யப்படுகிறது | அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது |
| எ.கா. நெல், கோதுமை | எ.கா. கரும்பு, தேயிலை, பருத்தி, தானியங்கள் |
| உள்நாட்டு சந்தையைப் பூர்த்தி செய்கிறது | அந்நிய செலவாணியை ஈட்டித் தருகிறது |
| இவை உணவுப் பயிர்கள் | இவை வேளாண்மைப் பயிர்கள் |
| தீவிர வேளாண்மை என அழைக்கப்படுகிறது | பரந்த வேளாண்மை என அழைக்கப்படுகிறது |

41.

| ஒரு பயிர் சாகுபடி | இரு பயிர் சாகுபடி |
|---|---|
| இது ஒரு போகம் எனப்படும் | இது இரு போகம் எனப்படும். |
| ஒரு போகத்தில் ஒரு பயிர் மட்டுமே சாகுபடி செய்வது | ஒரு போகத்தில் இரண்டு விதமான பயிர்கள் சாகுபடி செய்வது |
| எ.கா. தேயிலை, காப்பி, கரும்பு | எ.கா. கோதுமை, கடுகு. |

42.

| வேளாண் சார்ந்த தொழிலகம் | கனிமம் சார்ந்த தொழிலகம் |
|---|---|
| வேளாண் பொருட்கள் மூலப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. | உலோகம் மற்றும் உலோகமற்ற பொருட்கள் மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. |
| மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களில் தொழில்சாலைகள் செயல்படுகின்றன. | கனிமச் சுரங்கங்களுக்கு அருகில் தொழில்சாலைகள் செயல்படுகின்றன. |
| எ.கா. பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் | எ.கா. இரும்பு எஃகு தொழிற்சாலைகள் |
| மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், உத்திர பிரதேசம் | சோட்டா நாகபுரி பீடபூமி |

43.

| மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| தொடர்ச்சியான மலைத்தொடர் | தொடர்ச்சியற்ற மலைத்தொடர் |
| மேற்கு கடற்கரைக்கு இணையாக செல்கிறது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |
| தபதி நதியிலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. | மகாநதிக்கும் வைகை நதிக்கும் இடையில் காணப்படுகிறது. |
| உயரமாக மலை ஆனைமுடி | உயரமான சிகரம் மகேந்திர கிரி |
| உயரம் அதிகம் | உயரம் குறைவு |

தலைப்பு வினாக்கள்

44. **ஜெர்மனியின பேராசை**

அ) கெய்சர் இரண்டாம் வில்லியம்

ஆ) உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை ஜெர்மனிக்கு உண்டு

இ) ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதில்லை என்ற கூற்று

ஈ) ஹொலிகோலாண்ட்

45. **அடால்.்.ப் ஹிட்லர்**

அ) ஆஸ்திரியா

ஆ) சுங்க அதிகாரி

இ) தேசிய சமதர்மவாதிகள் அமைப்பு (நாசிக் கட்சி)

ஈ) மெயின் காம்ப் (எனது போராட்டம்)

46. **பிளாசி மற்றும் பக்சார் போர்**

**அ.** சிராஜ் உத் தௌலா

**ஆ)** வெல்லெஸ்லி பிரபு

**இ)** வாரிசு இழப்புக் கொள்கை

**ஈ)** 1858 ஆம் ஆண்டு

47. **ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்கள்**

அ) ஐரோப்பிய பாராளுமன்றம்

ஆ) சட்டம் இயற்றுதல், சமர்பித்தல், நிர்வாக செயல்பாடு

இ) லக்ஸம்பர்க் நகரில்

ஈ) ஐரோப்பிய மத்திய வங்கி

5 மதிப்பெண் வினாக்கள்

48. (அ) ஏகாதிபத்தியத்தின் விளைவுகள்

**சாதகமான விளைவுகள்**

1. குடியேற்ற நாடுகளில் போக்குவரத்து, தொலை தொடர்பு துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
2. புதிய விவசாய முறைகளை கையாண்டு உணவு பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தன.
3. கல்வி, மருத்துவம் மற்றும் சுகாதார துறைகளை மேம்படுத்தின.
4. குடியேற்ற நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தின.
5. நாடுகளில் அமைதி, கட்டுப்பாடு மற்றும் ஒற்றுமை வளர்த்தன.

**பாதகமான விளைவுகள்**

1. குடியேற்ற நாடுகள் சுதந்திரத்தை இழந்தன.
2. அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.
3. குடியேற்ற நாடுகள் சந்தைகளாக விளங்கின.
4. இனவேறுபாட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டது.
5. வேலையின்மையும் ஏழ்மையும் அதிகரித்தன.
6. பாரம்பரிய கலாச்சாரம் அழிந்து மேற்கத்திய கலாச்சாரம் அறிமுகமானது
7. அடிமை வியாபாரத்தினால் ஆப்பிரிக்க இனங்கள் மறைந்தன.

(ஆ) **F.D. ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள்**

1. **புதிய கொள்கை**
   1. எப்.டி. ரூஸ்வெல்ட் புதிய பயனுரிமை கொள்கையை கொண்டு வந்தார்.
   2. இது உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களைக் கொண்டு இருந்தது.
2. **டென்னசி பள்ளத்தாக்கு திட்டம்**
   1. தொழிற் பெருக்கம்
   2. விவசாயம் ஊக்குவித்தல்
   3. மண்வளம்
   4. வன வளம் பாதுகாத்தல்
   5. மின் உற்பத்தி செய்தல்
   6. கப்பல் போக்குவரத்து
   7. வெள்ளத்தடுப்பு
   8. அணைகள் கட்டுதல்
3. **கூட்டாட்சி அவசர நிவாரண நிர்வாகம்**
   மாநில, உள்ளாட்சிகளுக்கு 500 மில்லியன் டாலர்கள் நிதியாக வழங்கப்பட்டது.
4. **கூட்டாட்சி ரிசர்வ் வங்கி**
   வங்கி நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கு கடன் வழங்கியது.

5. **பாதுகாப்பு பரிவர்த்தனைச்சட்டம்**
பங்குச் சந்தையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உரிமம் உழங்கப்பட்டது.
6. **தேசிய தொழில் மீட்புச்சட்டம்**
1. தொழிலாளர்களின் சம்பள உயர்வு
2. பணிநேரக் குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.
7. **வேளாண்மை பொருட்கள் சீரமைப்புச் சட்டம்**
1. விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டது.
2. விவசாயிகள் உற்பத்தி செய்யும் தானியத்தின் அளவைக் குறைத்து விலை உயர்வுக்கு வழி வகுத்தது.

**(இ)ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்**

1. **பன்னாட்டு பிரச்சனை**
பல்வேறு பன்னாட்டு பிரச்சனைகளுக்கு அமைதியான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு கண்டுள்ளது.
2. **போர் முடிவுக்கு வரல்**
1. இஸ்ரேல் - பாலஸ்தீன போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.
2. ஈரான்- ஈராக் போரை முடிவுக்கு கொண்டுவந்தது.
3. **அணு சோதனை தடை சட்டம்**
1. 1963 ஆம் ஆண்டு – அணுசோதனை தடை சட்டத்தை நிறைவேற்றியது.
2. 1996 ஆம் ஆண்டு - தொடர் அணுசோதனை தடை சட்டத்தை நிறைவேற்றியது.
4. **சுற்றுச் சூழல் மாநாடு**
ரியோடி ஜெனிரோவில் - சுற்றுச்சூழல் மாநாட்டின் “அறிக்கை 21” அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டன.
5. **அமைதிப் படை**
ஐ.நா. தனது அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி, சூயஸ் கால்வாய் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வந்தது.
6. **பெண்கள் நலன்**
1. ஐ.நாவின் பெண்கள் மேம்பாட்டு நிதி, பெண்களின் முன்னேற்றத்திற்காக பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தி 100 நாடுகளில் பெண்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்காக பாடுபடுகிறது.
7. **சிக்கலை தீர்த்தல்**
1. கொரியப் போரை முடிவுக்கு கொண்டு வந்தது
2. ஆப்கான்-ரஷ்யப் பிரச்சினைய தீர்த்தது
3. வியட்நாம் போரை முடிவுக்கு கொண்டு வந்தது போன்றவை ஐ.நாவின் முக்கிய சாதனைகளாகும்.

49. (அ) **சார்க் அமைப்பு**
1. **தோற்றம்**
சார்க் அமைப்பு 1985 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
2. **விரிவாக்கம்**
இது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
3. **பொது செயலாளர்**
இதன் முதல் பொதுச் செயலாளர் அபுல் ஆஷான் ஆவார்.
4. **மாநாடுகள்**
1. 1985 – வங்காளதேசத்தின் டாக்கா நகரில் 2. 2007 - இந்தியாவின் டெல்லியில்
3. 2010 – பூடானில் திம்புவில் 4. 2014 – நேபாளத்தின் காட்மண்டு
என இதுவரை 18 மாநாடுகள் நடைபெற்றுள்ளது.
5. **உறுப்பு நாடுகள்**
இதில் எட்டு உறுப்பு நாடுகள் உள்ளன.
1. இந்தியா 2. பாகிஸ்தான் 3. நேபாளம் 4. பூடான்
5. பங்களாதேஷ் 6. இலங்கை 7. மாலத்தீவுகள் 8. ஆப்கானிஸ்தான்.
6. **செயல்பாடுகள்**
நாடுகள் தங்களுக்குள்
1. போக்குவரத்து 2. கடித சேவை 3. சுற்றுலா 4. வானியல்
5. சுகாதாரம் 6. வேளாண்மை 7. கிராமபுனரமைப்பு 8. தகவல் தொடர்பு
போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல்.

(ஆ) **தேர்தல் முறை**

**தேர்தல் வகைகள்**

1. நேரடித் தேர்தல்
2. மறைமுகத் தேர்தல்

**1. நேரடித் தேர்தல்**

1. குடிமக்கள் நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை நேரடித் தேர்தல் முறை எனப்படும்.
2. இந்தியாவில் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தேர்தல் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
3. இடைத்தேர்தலும், இடைப்பருவத் தேர்தலும் நேரடித் தேர்தல் முறையில் நடைபெறுகின்றன.

**1. இடைத் தேர்தல்**

ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர், மரணமடைந்தாலோ, பதவியை விட்டு விலகினாலோ இவ்விடத்தை நிரப்ப அத்தொகுதியில் மட்டும் நடைபெறும் தேர்தல் இடைத்தேர்தல் எனப்படும்.

**2. இடைப் பருவத் தேர்தல்**

நாடாளுமன்றமோ, சட்டமன்றமோ பதவி காலம் முடியும் முன்பே கலைக்கப்பட்டால், மீண்டும் நடத்தப்படும் தேர்தல் இடைப்பருவத் தேர்தல் எனப்படும்.

**2. மறைமுகத் தேர்தல்**

1. குடிமக்கள் நேரடியாக தங்களது வாக்குகளை அளிக்காமல், தங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் முறை மறைமுகத் தேர்தல் என்கிறோம்.
2. நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் ஆகியோர் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(இ) **ஜனநாயத்தின் வகைகள்**

**ஜனநாயகத்தின் வகைகள்**

1. நேரடி மக்களாட்சி
2. மறைமுக மக்களாட்சி

**1. நேரடி மக்களாட்சி**

1. மக்கள் நேரடியாக மக்களாட்சியில் பய்கேற்பா்.
2. பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமானிய நாகரிகத்தில் நடைபெற்று வந்தது.
3. பண்டைய இந்தியாவில் கிராம பஞ்சாயத்து முறையில் நேரடி மக்களாட்சி நடைபெற்றது.

**2. மறைமுக மக்களாட்சி**

1. மக்கள் நேரடியாக பங்கு பெறுவதை விடுத்து, தங்கள் பிரதிநிதிகள் மூலம் பங்கு பெறுகின்றனர்.
2. மக்களால் தோந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை உருவாக்கி நடத்துவர்.
3. பெரும்பாலான நாடுகளில் மறைமுக மக்களாட்சி முறை பின்பற்றப்படுகிறது.
4. அரசியல் கட்சிகள் ஆட்சிமுறையில் பெரும் பங்கு வகிக்கின்றன.

**மக்களாட்சியின் முக்கியத்துவம்**

1. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரநிதிகள் மதிக்கப்படுகின்றனர்.
2. மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு மற்றும் உத்திரவாதம் வழங்குகிறது.
3. முடிவுகள் மக்கள் நலநன மேன்மையடைய செய்கிறது.
4. சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்ற கொள்கைகள் ஜனநாயகத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.

50. (அ) **“இந்தியா ஓர் துணைக்கண்டம்”**

கண்டத்திற்குரிய பண்புகளான பல்வேறு வகையான,

1. இயற்கை அமைப்பு பிரிவுகளையும்
2. காலநிலைகளையும்
3. இயற்கைத் தாவங்களையும்
4. கனிம வளங்களையும்
5. மனித வாழிடங்களையும்
6. கலாச்சார கூறுகளையும்
7. மிகப்பரந்த நிலப்பரப்பையும்
8. பல இனங்களையும், மொழிகளையும் கொண்டு இருக்கும்.

எனவே ஒரு கண்டத்திற்குரிய அனைத்து பண்புகளையும் இந்தியா கொண்டிருப்பதால், இந்தியாவை ஒரு துணைக்கண்டம் என்று அழைக்கிறோம்.

(ஆ) **நீர் மேலாண்மை**

**1. நீர் மேலாண்மை**

1. நீர் மேலாண்மை என்பது கிடைக்கக்கூடிய நீர் வளத்தை நன்முறையில், மக்கள் நலனுக்காக பயன்படுத்துவது.
2. நீர் சீரழிவையும், நீர் தட்டுப்பாட்டையும் கட்டுப்படுத்தி, நம் எதிர்காலத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நிர்வகிப்பதும் ஆகும்.

**2. நீர் மேலாண்மையின் முக்கியத்துவம்**

1. நீர் அத்தியாவசியமான வளமாகும்
2. நீர், பல வகைகளில் பயன்படுகிறது
3. மண்வளம், நீர் வளம் இரண்டையும் ஒருங்கிணைந்த முறையில் நிர்வகிப்பது அவசியமாகிறது.
4. நீர் மேலாண்மை அனைத்து நிலைகளிலும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

3. **நீரிணை பேணிகாப்பதற்கு தேவையான அடிப்படை கூறுகள்**
    1. உள்ளூர் மக்களின் முழுமையான ஈடுபாடு, ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு
    2. வீட்டுப் பயன்பாட்டிற்கான நீரை நிர்வகிப்பதில் பெண்களின் முக்கியப் பங்கு
    3. நீரை ஒரு பொருளாதாரப் பொருளாகக்க கருதி அதனை லாபகரமானதாகவும், தேவைக்கேற்பவும் பயன்படுத்த வேண்டும்.
    4. தரமான நீரை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
    5. நீரை மழைநீர் அறுவடை என்ற நுட்பமான முறையை பயன்படுத்தி சேமிக்க வேண்டும்.

(இ) **காடுகளின் முக்கியத்துவத்துவம்**

1. **மூலப்பொருள்**
   காடுகள் வீட்டு தேவைக்கும், வணிகத்திற்கும் விலையுயர்ந்த மரங்களையும், தொழிற்சாலைகளுக்கு மூலப்பொட்களையும் தருகிறது.
2. **நறுமணப் பொருட்கள்**
   காடுகள் அரக்கு, கோந்து, பிசின், மருந்துகள், தேன், நறுமண பொருட்கள் மற்றும் மூலிகைகளை அளிக்கிறது.
3. **அந்திய செலாவணி**
   வனப்பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால், அந்நிய செலாவணியை ஈட்டுகிறது.
4. **பால் உற்பத்தி**
   காடுகள் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்களாக உள்ளதால் பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.
5. **சுற்றுலா**
   பல காடுகள் சுற்றுலா மையங்களாக திகழ்கின்றன.
6. **சுற்று சூழல் பாதுகாப்பு**
   காடுகள் வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்ஸைடை உட்கொண்டு காற்று மாசுப்படுதலை கட்டுப்படுத்துகிறது.
7. **மண்ணரிப்பு**
   காடுகள் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்ணரிப்பினை கட்டுப்படுத்துகிறது.
8. **நிலத்தடி நீர்**
   காடுகள் மழைநீரை பூமியின் உள்ளே செலுத்தி அதனால் நிலத்தடி நீரின் அளவை அதிகரிக்கிறது.
9. **எரி சக்தி**
   நாட்டின் எரிசக்தி தேவையை காடுகள் பூர்த்தி செய்கிறது.
10. **வாழிடம்**
    மனிதர், பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு இயற்கையான வாழிடங்களை காடுகள் அளிக்கிறது.
11. **காலநிலை**
    காடுகள் காலநிலையை சீராக்கி மழைப்பொழிவை தருகிறது.

51. (அ) **நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படை கருத்துக்கள்**

1. **மொத்த நாட்டு உற்பத்தி**
    1. ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பு
    2. அந்நாட்டு மக்கள் ஓராண்டில் ஈட்டிய வருமானம்
    3. வெளிநாட்டு முதலீட்டின் மூலம் கிடைக்கும் இலாபம்

    அவை மூன்றும் சேர்ந்ததே மொத்த நாட்டு உற்பத்தியாகும்
2. **மொத்த உள்நாட்டு உற்பத்தி**
    1. ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
    2. அந்தப் பொருட்கள் அந்நாட்டிற்கு சொந்தமான உற்பத்திக் காரணகிளால் உற்பத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) **நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம்**

1. **பொருளாதார நிலையை கணக்கிட**
   ஒரு நாட்டின் பொருளாதார செயல்பாடுகளின் நிலையை கணக்கிட பயன்படுகிறது.
2. **பொருட்களின் மதிப்பை அறிய**
   ஒரு நாட்டின் உற்பத்தி பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அறியப் பயன்படுகிறது.
3. **வருமானத்தை ஒப்பிட்டு பார்க்க**
   ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் போக்கையும் வேகத்தையும் முந்தைய ஆண்டுகளின் வருமானத்தை ஒப்பிட்டு பார்க்க பயன்படுகிறது.

4. **பிற நாடுகளுடன் ஒப்பிட**
   பிற நாட்டு வருமானத்ததுடன் ஒப்பிட்டு பார்க்கவும் பயன்படுகிறது.
5. **துறைகளை அறிய**
   நாட்டு வருமானத்தில் முதன்மைத்துறை, இரண்டாம் துறை மற்றும் பணிகள் துறை பங்களிப்பின் அமைப்பை அறிய பயன்படுகிறது.
6. **திட்டங்கள் வகுக்க**
   பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வேண்டி அரசு கொள்கைகளை வகுக்கவும் திட்டமிடவும் பயன்படுகிறது.

**(இ) நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள்**

**நாட்டு வருமானம்**

ஒரு நாட்டில் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் அளவே நாட்டு வருமானம் என்றழைக்கப்படுகிறது.

**நாட்டு வருமானம் கணக்கிடும் முறைகள்**

நாட்டு வருமானம் மூன்று முறைகளின் கணக்கிடப்படுகிறது. அவை

1. **உற்பத்தி முறை**
2. **வருமான முறை**
3. **செலவின் முறை**

1. **உற்பத்தி முறை**
   நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பை கணக்கில் வைத்துக் கொண்டு இம்முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
2. **வருமானமுறை**
   நாட்டிலுள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
3. **செலவின முறை**
   மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு, முதலீடு, சேமிப்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
   இந்தியாவில் பொதுவாக உற்பத்தி முறை மற்றும் வருமான முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

52. காலக்கோடு 1900 – 1930 (ஏதேனும் 5 மட்டும்)

1. 1907 – முக்கூட்டு நட்புறவு உடன்படிக்கை (திஹேக் மாநாடு)
2. 1908 – ஆஸ்திரியா போஸ்னியாவை இணைத்தல்
3. 1912 – பால்கன் நாடுகள் துருக்கிக்கு எதிராக போர் அறிவிப்பு
4. 1914 - முதல் உலகப் போர் துவக்கம்
5. 1917 – ரஷ்ய புரட்சி
6. 1918 – முதல் உலகப் போர் முடிவு
7. 1919 – பாரிஸ் அமைதி மாநாடு
8. 1920 – சர்வதேச சங்கம் தோற்றம்
9. 1921 – பாசிச கட்சி தோற்றம்
10. 1922 – இத்தாலியின் முசோலினி ஆட்சியமைத்தல்
11. 1923 – பீர் மண்படப் புரட்சி
12. 1926 – ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேர்தல்
13. 1929 – லேட்டரன் உடன்படிக்கை

53. அ. ஐரோப்பா வரைபடம்




ஆ. . ஆசியா வரைபடம்



54. புவியியல் - இந்தியா வரைபடம்




பே. சீனிவாசன்
பட்டதாரி ஆசிரியர் (வரலாறு)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 99943 94610
மின்அஞ்சல் : srinivasanb2401@gmail.com

Thanks to: waytosuccess guide